FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | அரசியல் விஞ்ஞானம் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **1 தொடக்கம் 10 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் மாத்திரம் சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.**

01. அரசியலானது.

A – அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக மோதும் நலன்களின் பெறுபேறாகும்.

B – யார், எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வர் என்பதனைத் தீர்மானிக்கும் ஒரு விளையாட்டாகும்.

C – அதிகாரம் போராட்டத்தின் நடைமுறை வெளிப்பாடாகும்.

D – தனிப்பட்டவர்கள் அரசியல் வாதிகள், அரசியல் கட்சிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.

E – கனவான்களின் ஒரு விளையாட்டாகவும் கருதப்படுகிறது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

agaram.lk

02. அசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன.

A – அரசியல் அதிகாரம் பற்றிய கற்கை

B – உலகியல் வாழ்க்கையிலிருந்து மக்களினை மீட்டெடுத்தல் பற்றிய கற்கை

C – மக்கள், அரசாங்கம் மற்றும் அரசுக்கிடையிலான தொடர்பு பற்றிய கற்கை.

D – மக்களின் அரசியல் நடத்தை பற்றிய கற்கை

E – அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

03. அரசியல் அதிகாரத்தின் மையமாக அரசு

A – அதிகார அரசியலை மாக்கிய வல்லி முதலில் முதன்மைப்படுத்தி உள்ளார்.

B – மக்ஸ்வெபர் தெளிவான முறையில் அரசினை விளக்குவதற்கு இதனைப் பயன்படுத்தியுள்ளார்.

C – பாராளுமன்றம், நீதிமன்றங்கள் பணியக அமைப்பு போன்ற அதிகாரம் மிக்க நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

D – சமூகத்தில் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தினை மரபுசார் சில நிறுவனங்களுக்கும் கொண்டமைந்துள்ளன.

E – அரசின் அதிகாரப் பலமே இறைமை அதிகாரம் என அடையாளப்படுத்தப்படுகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

04. அரசியல் தத்துவம் என்பது.

A – அரசியல் விபரிப்பில் பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் வரைவிலக்கணங்களை தெளிவுபடுத்துகின்றது.

B – அரசியலில் காணப்படும் அடிப்படை பிரச்சனைகளை ஆய்வு செய்கின்றது.

C – அரசியல் லட்சிய கோட்பாடுகள் முன்மொழிகின்றது.

D – 20ம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியில் பின்னடைவை எதிர்நோக்கியது.

E – 1970 களில் மீண்டும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE  (  )

05. அரசியல் கட்சி என்பது.

A – 18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோற்றம் பெற்றது.

B – ஜனநாயக அரசியலில் தவிர்க்கப்பட முடியாதது ஒரு அங்கமாகும்.

C – இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் 20ம் நூற்றாண்டின் மத்திய காலத்தின் பின் ஆரம்பமாகியது.

D – பிரதிநிதித்துவ முறை மற்றும் வாக்குரிமையின் பரவல் காரணமாக கட்சிகளின் பணிகள் முன்னிலை அடைந்தன.

E – தேர்தலை பிரதான ஊடகமாகக் கொண்டு அரசாங்கத்தின் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கினை கொண்டமைந்துள்ளது.

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE  (  )

agaram.lk

06. சிவில் சமூகம்

A – அரசுக்கு வெளியே காணப்படும் சமூகப் பரப்பாகும்.

B – தன்னார்வ தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கியது.

C – கொள்கைப் பரப்புரையில் ஈடுபடுகின்றது.

D – பிரஜைகளை வலுவூட்டுகின்றது.

E – ஒரு அரசியல் சார்பற்ற தளம்

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE  (  )

07. இறைமை என்பது

A – அரசை ஏனைய சகல அரசியல் மற்றும் சமூகத் தாபனங்களை விட மேலாக வைக்கின்றது.

B – தனி முதன்மையானதும் எல்லையற்றதுமான அதிகாரம் பற்றிய மூலக் கொள்கையாகும்.

C – பலவந்த அதிகாரத் தனியுரிமையை அரசுக்கு வழங்குகிறது.

D – நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத் துறைகளினூடாக அரசினால் பிரயோகிக்கப்படுகின்றது.

E – உள்ளக மற்றும் வெளியக இறைமை என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE  (  )

08. பாராளுமன்ற அரசாங்க முறையின் இன்றியமையாத மூலக்கொள்கைகளாவன.

A – அரசாங்கம் பாராளுமன்றின் நம்பிக்கையில் தங்கியிருப்பதனால் பாராளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும் அரசாங்கமாக இருத்தல்.

B – நிறைவேற்றுத்துறை கூட்டுத்தன்மையுடையதாக இருத்தல்.

C – அரசாங்கத்தின் தலைவரான பிரதம மந்திரி அரசின் தலைவர் மற்றும் ஆயுதப்படைகளின் தளபதி ஆகிய பதவிகளை வகித்தல்.

D – பொதுவாகப் பாராளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியின் உறுப்பினர்களிலிருந்து நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல்.

E – தேர்தலில் நிர்ணயிக்கப்படும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் அமைக்கப்படுதல்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

09. ஜனாதிபதி அரசாங்க முறையின் அடிப்படை மூலக்கொள்கைகளாவன

A – அரசு மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்ற இரு பதவிகளும் ஜனாதிபதிப் பதவியில் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்.

B – ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்குச் சட்டத்துறை திறன் பெற்றிருத்தல்.

C – நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் இரு வேறுபட்ட தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படுதல்.

D – யாப்பின் மூலம் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத்துறைகளுக்கு ஒன்றிலிருந்து இன்னொன்று சுயாதீனமான இரு அதிகாரப் பரப்புக்கள் ஒப்படைக்கப்படல்.

E – யாப்பின் மூலம் நிறைவேற்று ஆணையதிகாரம் ஜனாதிபதியிடம் குவிந்திருத்தல்.

agaram.lk

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

10. குடியுரிமை என்பது

A – ஒரு நாட்டில் வாழும் எல்லோருக்கும் உரித்தாகும் ஒரு சட்ட உரிமையாகும்.

B – அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு சட்ட நிலையாகும்.

C – ஓர் அரசியல் ஜன சமூகத்தில் வாழும் பிரஜைகளுக்கு குறிப்பிட்ட தேசியத்துவத்தினை வழங்கும் ஒரு சட்டவிதி முறையாகும்.

D – பிறப்பினால் அல்லது பதிவினால் பெற்றுக் கொள்ளப்படும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.

E – ஓர் அரசியல் சமூகத்தில் அதனை அனுபவிப்போருக்கு சமனானதும் முழுமையானதுமான உறுப்புரிமையை உத்திரவாதத்திற்கு உரிமையான ஒரு சட்ட அந்தஸ்தாகும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE ( )

❖ ***11 – 17 வரையான கூற்றுக்களில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

11. பெண்ணிய வாதம்

1) பெண் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகளை முன்மொழிகின்றது.
2) சமத்துவத்தை புறக்கணிக்கப்படுகின்றது.
3) கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்ற ஒரு கருத்தியல்.
4) பெண்களால் அனுபவிக்கப்படும் பாரபட்சங்களை முடிவுக்கு கொண்டு வர எத்தனிக்கின்றது.
5) குடும்ப நலனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. ( )

12. சோசலிச கருத்தியல்

1) அரசின் இருப்பை சகல சமூக முறைமைகளிலும் அவசியமானதாக கருதுகின்றது.
2) வர்க்கமற்ற சமூகம் ஒன்றுக்கான தேவையினை வலியுறுத்துகின்றது.
3) முதலாளித்துவ முறையினை மறு சீரமைக்க எத்தனிக்கின்றது.
4) சமூக வாழ்க்கையில் மதத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.
5) தனியார் சொத்துரிமையினை ஏற்றுக்கொள்கின்றது. ( )

13. சமஷ்டி அரசியலமைப்பு தொடர்பாக

1) சர்வ அதிகாரத்துவ ஆட்சி தோன்றுவதற்கான வாய்ப்பு உயர் மட்டத்தில் காணப்படும்.
2) அரசாங்கப் பொறிமுறை எளிமையானதாகவும் நெகிழ்ச்சியானதாகவும் இருக்கும்.
3) ஒன்றாக இணைந்த நிறுவனங்களைக் கொண்ட ஓர் அரசாங்கம் மட்டும் நிலவுதல்.
4) வேறுபாடுகளுக்கும் ஐக்கியத்துக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படும்.
5) மத்தியில் உள்ள நிறைவேற்று, சட்டத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் தனி முதன்மையானவையாக இருத்தல். ( )

agaram.lk

14. காலனித்துவ ஆட்சி தொடர்பாக

1) தனது நோக்களுக்காக குடியேற்றத்தின், சமூக பொருளாதார, கலாச்சார அரசியல் நிறுவனங்களை மாற்றி அமைக்க முற்படல்.
2) உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை இல்லாதொழித்தது.
3) குடியேற்ற நாட்டின் பொருளாதார, சமூக, கலாச்சார அரசியல் நலன்களை வழிப்படுத்தல்.
4) குடி மக்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தல்.
5) பொது நிர்வாகம், பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலை போன்ற ஒழுங்கு முறை இயந்திரங்களைக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்தல். ( )

15. குடியரசு வாதம்.

1) இறைமை உரிமையாளன், ஆட்சியாளன் அன்றி பொதுமக்களாவார்.
2) ஒரு நாட்டின் குறிப்பிட்ட பிரசைகளின் நலனுக்காகவே பிரசைகள் சமூகமாக ஒழுங்கமைக்கப்படுகிறது என்கின்றது.
3) இதன் முன்னோடிகளாக தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், மொண்டஸ்கியூபோன்றவர்களாவார்.
4) 20ம் நூற்றாண்டு காலத்தில் பாசிசவாதத்திற்கு சமாந்திரமாக வளர்ச்சியடைந்தது.
5) முதலாளி அரசை வீழ்த்தி தொழிலாளர் வர்க்கத்தினால் அரச அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்கிறது. ( )

16. ஒற்றையாட்சி அரசாங்க முறையொன்றில்
   1) இறைமை பகிரப்படுவதில்லை.
   2) இறைமை பிராந்திய அரசாங்கங்களுடன் பகிரப்படுகிறது.
   3) சட்டத்துறை இரண்டாவது சபையைக் கொண்டிருத்தல் அவசியமானதொரு பண்பாடும்.
   4) உச்ச நீதிமன்றம் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கிடையிலான பிணக்குகுளை தீர்த்து வைக்கின்றது.
   5) பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் மட்டுப்படுத்தப்படுகிறது. ( )

17. கூட்டு சமஷ்டி அரசாங்க முறை
   1) சுதந்திர அரசுகளுக்கிடையிலான சுயாதீனமான ஒரு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.
   2) ஏனைய அரசாங்க முறைகளை விட வினைத்திறன் மிக்கது.
   3) பலமான மத்திய அரசாங்கத்தைக் கொண்டது.
   4) ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய அரசியல் அமைப்புக்கு முன்னர் காணப்பட்டது.
   5) தனியானதொரு சட்ட முறைமையினைக் கொண்டுள்ளது. ( )

❖ ***18 – 20 வரையான வினாக்களுக்கு சரியான கூற்றுக்களின் சேர்மானங்களைத் தெரிக.***

18. சமூக முரண்பாடு என்பது
   A – இரண்டு குழுக்களிடையே ஏற்படும் முரண்பாடு ஆகும்.
   B – இரண்டு நாடுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடு ஆகும்.
   C – இரண்டு மதப்பிரிவுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடு ஆகும்.
   D – இரண்டு இனக்குழுமங்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடு ஆகும்.
   E – தனிநபர் ஒருவருக்குள் இடையே ஏற்படும் முரண்பாடு ஆகும்.
   1) A, D  2) A, C, D  3) A, C, E  4) A, B, C, D  5) B, C, D, E ( )

19. தேசிய வாதம் என்பது.
   A – 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த பிரதானமான அரசியல் கருத்தியல் தேசிய வாதம் எனப்படும்.
   B – தேசிய வாதம் என்பதற்கு முறையான ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையொன்றில்லை.
   C – தேசிய வாதத்தை பிரதான மூன்று அணுகுமுறைகளினூடாக இனங்காண முடியும்.
   D – தேசிய வாதம் கருத்தியலாகவும் அரசியல் இயக்கமாகவும் பிரதான இரண்டு தன்மைகளைக் கொண்டது.
   E – தேசிய வாதம் ஒரு முகப்படுத்தப்பட்ட சிந்தனை தொகுதியை கொண்டமைந்துள்ளது.
   1) A, D  2) A, C, D  3) A, C, E  4) A, B, C, D  5) B, C, D, E ( )

20. அமுக்ககுழுக்களானவை
   A – நல்லாட்சியினைக் கொண்டு நடத்துவதற்கு அவசியமானது
   B – தனிப்பட்ட நலன்களின் மேம்பாட்டுக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் சங்கமாகும்.
   C – தமது நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் அடைவதற்கும் பலவந்த வழிமுறைகளைப் பயன்படுத்தும்.
   D – அரசியல் கட்சிகளின் குறைநிரப்பியாக செயற்பட்டு பிரஜைகளின் அரசியல் பங்குபற்றல் வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.
   E – தேசிய ரீதியானவையாகவும், சர்வதேச ரீதியானவையாகவும் காணப்படும்.
   1) A, D  2) A, B, C  3) A, B, C, D  4) A, B, C, D  5) B, C, D, E ( )

agaram.lk

❖ *21 – 25* **வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1) | உண்மை | உண்மை |
| 2) | உண்மை | பொய் |
| 3) | பொய் | உண்மை |
| 4) | பொய் | பொய் |
| 5) | உண்மை | உண்மையான இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 21. | தத்துவார்த்த அணுகு முறையினை பிளேட்டோ மற்றும் அரிஸ்ரோட்டில் தமது ஆய்வுகளுக்கு பயன்படுத்தி உள்ளனர். | 20ம் நூற்றாண்டில் சார்ள்ஸ் டெய்லர் மற்றும் யேகன் ஹபர்மஸ் தமது ஆய்வுகளுக்கு பயன்படுத்தி உள்ளனர். ( ) |
| 22. | அரசாங்கம் அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவர் நிறுவனமாக செயற்படுகின்றது. | சட்ட உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், பொதுமக்களுடன் தொடர்புகளை பேணல் மற்றும் ஏனைய அரசுகளுடன் தொடர்புகளை பேணல் அரசாங்கத்தின் பிரதான பண்பாகும். ( ) |
| 23. | முரண்பாடானது சாதகமான மற்றும் பாதகமான இரண்டு அணுகு முறைகளைக் கொண்டது. | அரசுக்குள்ளான முரண்பாடு பற்றி அரிசயல் கற்கை நெறியில் முக்கியத்துவம் செலுத்தப்படுவதில்லை. ( ) |
| 24. | கிரேக்க நகர அச்சு முறையில் மக்கள் அனைவரும் அரசியல் செயன்முறையில் பங்குபற்றினர். | பிரதிநிதித்துவ ஜனநாயக முறையே இங்கு காணப்பட்டது. ( ) |
| 25. | உலகமயமாக்கல் 19ம் நூற்றாண்டின் தோற்றம் பெற்றதாகும். | உலகமயமாக்கலின் விளைவாக தேசிய அரசுகள் பலவீனமடையும் எனக் குறிப்பிடப்படுகின்றது. ( ) |

(25X1=25புள்ளிகள்)

agaram.lk

## குறு வினா

01. “அரசியல் என்பது அதிகாரத்துக்கான போராட்டமாகும். அப்போராட்டம் இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது” அவ்விரு வழிகளையும் பெயரிடுக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

02. கிரேக்க காலத்தில் நகர அரசோடு தொடர்புபடுத்தி அரசியல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரண்டு கருக்களையும் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

03. பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களைத் தருக.

i) அரசியல் :- ……………………………………………………………………

ii) ஒப்பீட்டு அரசியல் முறை :- ……………………………………………………………………

04. அரசியல் பொருளாதார அணுகுமுறையில் சமூக ஒழுங்கமைப்பு பிரதானமாக இரு தளங்களினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவற்றினைத் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

agaram.lk

05. “மனிதப் பிறவிகளின் பௌதீக இருப்பானது இரு வேறுபட்ட மூலகங்களிலிருந்து தோற்றம் பெறும் இரு தொகுதிச் சக்திகளினால் ஆளப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றது” அவ் இரு மூலகங்களையும் அடையாளம் கண்டு பெயரிடுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

06. கீழே தரப்பட்டுள்ள கூற்று (i) இனாலும் கூற்று (ii) இனாலும் குறிக்கப்படும் அரசாங்கத்தின் துறைகளை அடையாளம் கண்டு பெயரிடுக.

i) அரசாங்கச் செயல்களை ஆரம்பிப்பதற்கும் பொதுக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப் படுத்துவதற்கும் அரச செயற்பாடுகளை இனைப்பதற்கு பிரதானமாகப் பொறப்பாகவுள்ள துறை.

…………………………………………………………………………………………………

ii) சட்டத்தைக் கலந்துரையாடி ஆக்கம் செய்வதற்கும் நிறைவேற்றுத் துறையின் மீது கண்காணிப்பைச் செலுத்துவதற்கும் பிரதானமாகப் பொறுப்பாகவுள்ள துறை.

…………………………………………………………………………………………………

07. பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயரினைக் குறிப்பிடுக.

i) அரசியல் மனிதன், அரசியல் சமூக அடிப்படை :- …………………………………………

ii) மாற்றமுறும் சமூகத்தில் அரசியல் ஒழுங்குமுறை :- …………………………………………

08. பின்வரும் கருத்துக்களை முன்வைத்தவர்களின் பெயரினைக் குறிப்பிடுக.

i) சமூகப் பிரஜாவுரிமை :- ……………………………………………………………

ii) பொதுச்சித்தம் :- ……………………………………………………………

09. அமெரிக்க சமூக உளவியலாளரான மோர்டின் டோய்ஷ் முரண்பாட்டினை இரண்டாக வகைப்படுத்தி உள்ளார். அவற்றினைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

10. ஒற்றையாட்சி அரசியல் முறைமையில் அதிகாரப் பரவலாக்கம் மூன்று முறைகளில் ஏற்படுகிறது. அவற்றில் இரண்டினைத் தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

(10X1=10 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பின்வரும் வினாக்களில் இருந்து இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.**

01) அரசியலைக் கற்பதற்கான பின்வரும் அணுகுமுறைகளில் இரண்டினைப் பரிசீலிக்குக.

1) அரசியல் பொருளாதார அணுகுமுறை

2) நடத்தை வாத அணுகுமுறை

3) சமூகவியல் அணுகுமுறை

(20 புள்ளிகள்)

02) பின்வருவனவற்றில் இரண்டினை விமர்சன ரீதியாக ஆராய்க.

1) அரசும் இறைமையும்

2) அரசும் பிரஜையும்

3) பூகோள மயமாக்கலும் அரசும்.

(10X2=20 புள்ளிகள்)

03) பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி சாங்க முறையின் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றுள் இரண்டினை விளக்குக.

1) மத சார்பின்மை வாதம்.

2) தேசிய வாதம்

3) குடியரசு வாதம்

(10X2=20 புள்ளிகள்)

agaram.lk